# தாங்கள் தனித்துவமானவராகத் தோற்றமளிக்கத் தயாரா?

*இந்தக் கணம் Victoria Police உங்களை நாடுகிறது. எங்களிடம் மாறுபட்ட அளவுகளைக் கொண்ட பரபரப்பூட்டும் சவால்களையுடைய பதவிகள் உள்ளன. இவைற்றிலஇ உங்களின் ஆர்வத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கலாம்.*



***காவல்துறை உறுப்பினர்கள்***

*காவல்புரிவது என்பது சவாலான, பலனுள்ள வாழ்க்கைப் பணியாகும். எல்லா விக்டோரிய மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களது வாழ்க்கையை உத்தரவாதத்துடனும், பாதுகாப்புடனும் வாழ வைப்பதால் இது மிகவும் அசாதாரணமான வேலையாகும்.*



***பாதுகாப்புச் சேவை அதிகாரிகள்***

*இவர்கள் வளர்ந்து வரும் நமது இரயில் வலையமைப்புக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கின்றனர். இப்பொறுப்பில் நீங்கள் ஒவ்வொரு நாளும் இரயில் சேவையைப் பயன்படுத்துகின்ற ஏறக்குறைய 40,000 மக்களையும், சமுதாயத்தையும் பாதுகாப்பதில் ஈடுபடுவீர்கள்.*



***விக்டோரிய மக்கள் பொதுச் சேவை***

*Victoria Police 3000 மேற்பட்ட துணை அதிகாரிகளைக் கொண்ட குழாமை விக்ரோறியா முழுமையாக நியமித்து Victoria Police படைக்கு பல் வகையான சவால் நிறைந்த நிலைகளில் அத்தியாவசியமான ஆதரவை வழங்குகின்றது.*

**VICTORIA POLICE உறுப்பினராவதற்கோ அல்லது பாதுகாப்புச் சேவை அதிகாரியாவதற்கோ நீங்கள்:**

- 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும
- ஆஸ்திரேலியக் குடிமகனாகவோ அல்லது நிரந்தரக் குடியுரிமை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்
- நீங்கள் 21 வயதுக்குக் குறைவானவராக இருந்தால், கட்டாயம் விக்டோரியன் கல்விச் சான்றிதழ் (VCE) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்குச் சமமான முதுநிலை விக்டோரியன் பயன்பாட்டுக் கல்விச் சான்றிதழ் (VCAL) ஏற்றுக்கொள்ளப்படும்.
- குற்றவியல் மற்றும் போக்குவரத்து சம்பந்தப்பட்ட தண்டனைகளைப் பொறுத்தவரையில் தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்
- கண்பார்வைத் தரத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். நீங்கள் தகுதியானவரா என்பதைத் தெரிந்துகொள்ள உங்கள் உள்ளூர்க் கண் பரிசோதனை நிபுணரிடம் ஆலோசனை செய்யவும
- உடல் தகுதியுள்ளவராகவும், அதிகமாகத் தேவைப்படுகின்ற, உடல் ரீதியாக சவாலான பொறுப்பில் வேலை செய்யத் தயாராக இருத்தல் வேண்டும்

மேலே குறிப்பிட்டுள்ள தகுதித் தேவைகளைத் தவிர, காவல்துறை உறுப்பினர்கள் விக்டோரியாவில் வழங்கப்படும் கையால் இயக்குகின்ற தற்போதைய வாகன ஓட்டுநர் உரிமம் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

**எங்கள் விழுமியங்கள்**

Victoria Police குறிப்பிடத்தகுந்த அளவு சமூக நம்பிக்கையையும், திருப்தியையும் சம்பாதித்திருக்கிறது. எங்களது எல்லா மக்களும் எங்கள் அடிப்படை விழுமியங்களைப் பின்பற்ற வேண்டுமென உறுதி பூண்டுள்ளோம்:

பின்வரும் அடிப்படை விழுமியங்கள் எல்லா அங்கத்தினர்களுக்கும் அவசியமானவையாகும்:

**ஒழுக்கம்**
**தலைமைப் பண்பு**
**இணக்கமான தன்மை**
**மரியாதை**
**ஆதரவு**
**தொழில்சார் நிபுணத்துவம்**

**விடுப்பு**
ஒரு காவல்துறை உறுப்பினராக அல்லது பாதுகாப்புச் சேவை அதிகாரியாகப் பட்டம் பெற்றவுடன், உங்கள் விடுப்பு உரிமைகள் பின் வருமாறு…

- வருடத்துக்கு ஏழு வார பொழுதுபோக்கு விடுப்பு அத்துடன் கூடுதலாக 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு.
- வருடத்துக்கு 15 நாட்கள் நோய்க்கால விடுப்பு.
- தந்தை மற்றும் தாய்மை விடுப்பு மற்றும் கல்வி விடுப்பு உட்பட பல்வேறு தாராளமான விடுப்பு உரிமைகள்.



**காவல்துறை உறுப்பினர்கள்**

**Victoria Police -இல் உறுப்பினராவதற்குத் தேவை எதுவோ அது உங்களிடம் உள்ளதா?**
நாமெல்லாரும் வாழுகின்ற இந்த சமுதாயத்துக்குச் சேவை செய்கின்ற உந்துதல், அதீத ஆர்வம் மற்றும் தீராத ஆசை உங்களிடம் இருந்தால், உங்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

காவல்புரிவது என்பது சவாலான, பலனுள்ள வாழ்க்கைப் பணியாகும். எல்லா விக்டோரிய மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களது வாழ்க்கையை உத்தரவாதத்துடனும், பாதுகாப்புடனும் வாழ வைப்பதால் இது மிகவும் அசாதாரணமான வேலையாகும்.

நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றவர் நீங்கள்தானா? பலதரப்பட்ட மக்களைக் கொண்ட நம்முடைய சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் விக்டோரியா முழுவதிலிருந்தும் ஆண்களையும், பெண்களையும் நாங்கள் பணியமர்த்த விரும்புகிறோம்.

உங்களைப் பற்றி நாங்கள் அதிகம் அறிந்து கொள்ளவும், Victoria Police -இல் உறுப்பினராவதற்குத் தேவையானவற்றை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ளவும், எங்கள் வலைத்தளத்தில் உள்ள தகுதித் தேர்வு மற்றும் பொருத்தத் தேர்வை இணையத்தில் எழுதவும்.

**வேலை நேரங்கள்**
Victoria Police வாரத்துக்கு ஏழு நாட்களும், ஒரு நாளைக்கு 24 மணி நேரமும் சேவையை வழங்குகிறது. ஒரு காவலர் என்ற வகையில் நீங்கள் வார இறுதி நாட்கள், இரவுப்பணி, பொது விடுமுறை நாட்கள் உட்பட பல்வேறு ஷிப்டுகளில் வெவ்வேறு இடங்களில் வேலை செய்ய வேண்டியதிருக்கும். முழுநேர வேலை செய்பவருக்கு சாதாரண வேலை நேரம் என்பது இரு வாரங்களுக்கு 80 மணிநேரம் ஆகும்.

**பயிற்சி**
Victoria Police Academy -இல் பணியமர்த்தும் பயிற்சியை மேற்கொள்ளும்போது காவல்பணி என்ன என்பதை நீங்கள் அனுபவத்தில் அறிந்துகொள்வீர்கள். பயிற்சிக் காவலராகக் கடமைகளை செய்யும் 'வேலையுடன்' அறிவு, திறமை மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை உங்களுக்கு ஊட்டி உங்கள் பயிற்சியை முடிக்கும் விதத்தில் அந்த 33 வாரப் பயிற்சிப் பரிபாலனம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக் காவலராகப் பட்டம்பெற நீங்கள் எல்லாவிதமான பயிற்சியிலும் தகுதிபெற வேண்டும். அத்துடன; Victoria Police -இன் ஊக்கமுள்ள அங்கத்தினராவதற்குத் தனிப்பட்ட தரமான குணங்கள், சுபாவம் மற்றும் மனப்பாங்கு இருக்கிறது என்பதைக் காண்பிக்க வேண்டும்.

**காவலர் பயிற்சிக் கல்லூரிக்குப் பிறகு**
பட்டமளிப்புக்குப் பிறகு, நீங்கள் எங்கு பயிற்சியை முடிக்கவேண்டும் என்பதைப் பற்றி மூன்று நகர்ப்புறப் பகுதிகளை முன்மொழியக் கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். இருப்பினும், நீங்கள் நாட்டுப்புற இடங்கள் உட்பட விக்டோரிய மாநிலம் எங்கேயும் நியமிக்கப்படலாம்.

**விண்ணப்பிக்க**
எங்களுடைய தகுதி அளவை முழுவதுமாகப் பெற்றிருப்பதாக நீங்கள் முடிவுசெய்து, தகுதித்தேர்வும் எழுதியிருந்தால், நீங்கள் Victoria Police -இல் காவல்துறை உறுப்பினர் என்ற முறையில் எழுச்சியான மற்றும் சவாலான வாழ்க்கைப்பணியைத் தொடங்கி அடுத்த கட்டத்துக்குச் செல்லத் தயாராகி விட்டீர்கள்.



**பாதுகாப்புச் சேவை அதிகாரிகள்**

**சமூகத்தைப் பாதுகாத்து, ஒரு மாற்றத்தை உருவாக்கும் பணியில் உங்களை எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா?**

இந்தக் கணம்இ Victoria Police முக்கியத்துவம் வாய்ந்த விக்ரோறியச் சமுதாயப் பணிக்குப் பங்களிக்க ஆட்களைத் தேடுகின்றது.

ஒரு பாதுகாப்புச் சேவை அதிகாரியென்ற முறையில்இ எமது இரயில் வலையமிப்பில் தினமும் பயணிக்கின்ற 400,000 வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கின்ற பணியில் உதவியாவீர்கள்.

உங்கள் பணி பொதுமக்களின் பொது விசாரணைகளுக்கு உதவியாகவிருப்பதும் அறிவுரைகள் வழங்குவதோடுஇ சமுதாயத்திற்குப் பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்துவதாகும். அத்தடன் மதுஇ போதை வஸ்த்துஇ சொத்துடைப்புப் போன்ற சமுதாய விரோதச் சொயல்களையும் கையாளும் நிலமைகளும் ஏற்படலாம்.

**வேலை நேரங்கள்**
பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் இரயில் வலையமைப்புச் சேவையைப் பாதுகாப்பதற்காக எட்டுஇ ஒன்பதுஇ பத்து மணித்தியாலக் கால அளவைக் கொண்ட தொகுதி நேரங்களில் பணியாற்றுவர். இவர்கள் தாங்கள் நியமிக்கப்பட்ட இரயில் நிலையங்களில்இ பிற்பகல் 6 மணியிலிரந்து கடைசி இரயில் புறப்படும் வரைஇ கடமையில் ஈடுபட வேண்டும்

சில வேலை நேரங்களுக்கு அடிப்படைச் சம்பளத்துக்கு மேல் ஷிப்ட் உதவித்தொகைகளும் கிடைக்கும்.

**பயிற்சி**
Glen Waverley -இல் உள்ள Victoria Police Academy -இல் 12 வார விரிவானப் பயிற்சிப் பாடத்திட்டத்தை நீங்கள் தொடங்குவீர்கள். அதற்காக நீங்கள் முழுநேரப் பயிற்சியை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7:30 முதல் மாலை 4:10 வரை எடுக்க வேண்டியதிருக்கும்.

பாதுகாப்புச் சேவை அதிகாரிகள் (PSO) பயிற்சியானது, மிகவும் நிச்சயமற்ற நிலைமையிலும், அங்கத்தினர்களை ஆற்றல் வாய்ந்த சூழ்நிலையில் பாதுகாப்பாக வேலை செய்யத் தயார் செய்கிறது.

ஒரு காவல்துறை அங்கத்தினரைப் போல துப்பாக்கிச் சுடுவதையும், தற்காப்பு உத்திப் பயிற்சியையும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் வீடிழந்தோர், இளைஞர், போதைப்பொருள் மற்றும் மதுவால் பாதிக்கப்பட்டவர்கள், முதியோர் மற்றும் மனநிலை வியாதியுள்ளோருடன் வாழும் நபர்கள் போன்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு மரியாதையைக் காண்பிப்பது என்பதைப் பற்றியும் கற்றுக் கொள்ள வேண்டும்.

**காவலர் பயிற்சிக் கல்லூரிக்குப் பிறகு**
12 வாரப் பயிற்சிக்குப் பிறகு நீங்கள் பாதுகாப்புச் சேவை அதிகாரியாகப் பட்டம் பெற்றவுடன், Victoria Police Academy -இல் உங்களுக்குப் பட்டமளிப்பு விழா ஒன்று நடைபெறும்.

ஆரம்பத்தில் நீங்கள் நகரத்தில் அமைந்திருக்கும் சுரங்க நிலையங்களிலும்இ மத்திய மைய நிலையங்களான Footscray, North Melbourne, Clifton Hill மற்றும் Richmond போன்ற நிலையங்களிலும் பணியாற்றுவீர்கள். உங்களுடைய தொடர் பணிப் பயிற்சியின் ஒரு அங்கமாக நகரும் காவல் படையின் உதவியுடன் இறுதியில் புறநகர் நிலையங்களிலும் அமர்த்தப்படலாம்.

**விண்ணப்பிக்க**
நீங்கள் பாதுகாப்புச் சேவை அதிகாரியாவதற்கு வேண்டப்படும் தகுதிகள் கொண்டவரா என்று அறிவதற்கு Victoria Police தொழில் வலையத் தளம் policecareer.vic.gov.au/pso எனும் வலையத் தளத்தில் தகுதி காண் பரீட்சை எடுக்கவும்.



**விக்டோரியன் பொதுச்சேவை**

நீங்கள்இ காவல் துறை என எண்ணும் பொழுதுஇ நீங்கள் நினைப்பது வெளியே சமூகத்திடையே நடமாடும் காவல் துறை அங்கத்தவர்களையே. ஆனால் ஆயிரக் கணக்கானவர்களை Victoria Police துணைப் பணிகளில் அமர்த்தியுள்ளனர். இவைற்றில் உங்களுக்குப் பொருத்தமான வேலை எங்களிடம் இருக்கக் கூடும்.

Victoria Police -இல் பல்வேறு வகையான வேலைகள் உள்ளன. அவை தடயத்துறை முதல் ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் வரை, நிறுவனத்தின் பலதரப்பட்ட தேவைகளைப் பிரதிபலிக்கின்றன.

காத்திருக்கும் வாய்ப்புகளில் பின்வருபவையும் அடங்கும்:

- நிதி மற்றும் கொள்முதல்
- மனிதவள மேலாண்மை
- தகவல் தொழில்நுட்பம்
- பொது நிர்வாகம்
- ஆராய்ச்சி, வியூகத் திட்டமிடல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு
- கைரேகை நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தடயத்துறை விஞ்ஞானிகள் போன்ற சிறப்புப் பொறுப்புகள்.

ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை செய்வதில் உள்ள நன்மை என்னவென்றால் வித்தியாசமான வணிகப் பிரிவுகள் அனைத்திலும் வேலை செய்யும் வாய்ப்பும், பல்வேறு பகுதிகள் மற்றும் திறமைத் தொகுப்புகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பும் ஆகும்.

Victoria Police தன் ஊழியர்களுக்கு வாழ்க்கைப் பணியில் முன்னேறுவதற்கான வாய்ப்பையும், பல்வேறு வகையான பகுதிகளில் பன்முகத் திறன்களை வளர்க்கும் வாய்ப்பையும் தருகிறது. விக்டோரியாவின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை வேலை வாய்ப்புகள் மாநகர் மற்றும் மண்டலப் பகுதிகளில் இருக்கின்றன.

Victoria Police அனைவருக்கும் சமமாக வாய்ப்பளிக்கும் நிறுவனம்.

**நாங்கள் என்ன வழங்குகிறோம்**
நீங்கள் Victoria Police -இல் இருக்கிறீர்கள் என்றால், சமுதாயத்துக்குப் பெரும் பங்களித்து, ஒரு மாற்றத்தை உருவாக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கிறது என்று பொருளாகும். எங்கள் பங்குதாரர்களுடன் இணைந்து, ஒரு பாதுகாப்பான விக்டோரியாவை உருவாக்க வேண்டிய எங்கள் குறிக்கோளை அடைய உதவும் வகையில் நாங்கள் பின்வரும் பணிகளைச் செய்கிறோம்:

- சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒரு பாதுகாப்பான மற்றும் பத்திரமான சமூகத்தை உருவாக்க உறுதிப்படுத்துதல்
- குற்றங்களை விசாரித்தல் மற்றும் குற்றவாளிகளைத் தண்டித்தல்
- சமூக உதவி மற்றும் கல்வியை வழங்குதல்
- குற்றத் தடுப்பு வியூகங்களைச் செயல்படுத்துதல்
- மற்ற அரசுத்துறைகள், நிறுவனங்கள் மற்றும் உள்ளூர்ச் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுதல்.

Victoria Police -இல் வேலை செய்யும் ஒரு பொதுச் சேவை அதிகாரி என்ற முறையில் நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்லவும், நிறுவனத்தின் வியூக முயற்சிகளுக்கு ஆதரவு தரவும் உதவுகிறீர்கள். ஒரு பாதுகாப்பான விக்டோரியாவை வழங்கும் வகையில் அன்றாடச் செயல்பாடுகளை நடத்தத் தேவையான ஆதாரவளங்களை வழங்கி, முன்னணிக் காவல்துறை உறுப்பினர்களுக்கு உதவுவதன் மூலம் நீங்கள் இதைச் செய்ய முடியும்.

விக்டோரிய அரசு மற்றும் Victoria Police எனப்படும் அருமையான அமைப்பு இவைகளில் வேலை செய்வதால் கிடைக்கும் பல நன்மைகளும் உங்களுக்குக் கிடைக்கும்.

**விண்ணப்பிக்க**
Victoria Police -இல் உள்ள தற்போதைய அனைத்துப் பதவிகளும் www.careers.vic.gov.au என்ற விக்டோரியன் அரசு இணையதளத்தில் விளம்பரம் செய்யப்படுகிறது.

வெற்றிபெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களும் பணிநியமன அழைப்பைப் பெறுவதற்கு முன், குற்றப் பதிவுச் சோதனைகள், கைரேகைச் சோதனைகள் மற்றும் நிதிப் பரிசோதனைகள் உட்பட பல பாதுகாப்புச் சோதனைகளுக்கு உள்ளாக வேண்டியதிருக்கும்.